www.tamilarangam.net

உடனடி வெளியீட்டிற்கு:

# இலங்கை: கருணா குழுவினரும் புலிகள் இயக்கமும் தொடர்ந்தும் சிறார்களை கடத்தி படைகளில் சேர்க்கின்றனர்

*கருணா குழுவினரை தடுப்பதற்கும் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் தவறியுள்ளது*

(நியூ யோர்க், மார்ச் 29, 2007) – அரசாங்கத்திற்கு சார்பாக செயற்படும் கருணா குழுவினரால் பலவந்தமாக சிறார்கள் கடத்தப்படுவது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதாக அரசாங்கம் உறுதியளித்திருந்த நிலையிலும்கூட, தொடர்ச்சியாக சிறார்கள் கடத்தப்படுவதை தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் எவ்வித தாக்கமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை, என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இன்று அறிவித்துள்ளது. இலங்கையில் அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் (புலிகள் இயக்கம்) தொடர்ச்சியாக சிறார்களை படையில் சேர்த்து அவர்களை படையினராக பயன்படுத்துகின்றது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில், கருணா குழுவினரின் அரசியல் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் (TMVP) பல காரியாலயங்களில், நிட்சயமாக 17 வயதிற்குக் குறைந்த சிறார்கள், சிலர் துப்பாக்கிகள் சகிதமும் (assault rifles) காவல் கடமைகளில் ஈடுபட்டிருப்பதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேரடியாகவே அவதானித்துள்ளது. இலங்கை இராணுவத்தினரும் பொலீசாரும் தொடர்சியாக அச்சிறார்களுக்கு அருகாமையால் நடந்தும் வாகனங்களிலும் சென்றாலும், வெளிப்படையாக எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

அக்குழுவின் தலைவரான கேர்ணல் கருணா என்று அழைக்கப்படும், வி. முரளீதரனின் சொந்த ஊரான கிரானில் அமைந்துள்ள TMVP காரியாலயத்தை துப்பாகி ஏந்திய ஒரு சிறுவன் காவல் காப்பதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அவதானித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை மற்றும் மொறக்கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில், வீதியின் மறுபுறம் இருக்கும் இலங்கை இராணுவத் தளங்களுக்கு அருகே அமைந்துள்ள TMVP காரியாலயங்களிலும், அவற்றை அண்டியும் ஏனைய பல சிறார்கள், ஆயுதங்களை ஏந்தியபடி நடமாடுவது காணக்கூடியதாக இருக்கிறது.

“இராணுவத் தளத்திலிருந்து அரசாங்கப் படையினர் வீதிக்கு மறபுறம் பார்க்கும்பொழுது, சிறார்கள் ஆயுதங்களை ஏந்தியபடி கருணாவின் காரியாலயங்களை காவல் காப்பதை காணக்கூடியதாக இருப்பினும், அப்படையினர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருப்பதை பார்க்கும்பொழுது, இம்மோசமான அத்துமீறலை தடுத்து நிறுத்துவதற்கு எவ்வித அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கின்றது என்பதை நம்புவது மிக கடினமாக உள்ளது,” என, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் ஆசிய பிராந்திய பணிப்பாளர், ப்ரட் அடம்ஸ் அவர்கள் கூறினார். “கருணா குழுவினர் அரசின் ஒத்தாசையுடன் சிறார்களை பிடித்துச்சென்று படையினராகப் பாவிக்கும் நடவடிக்கையானது முன்னெப்போதையும் விட தற்போது எவ்விதமான ஒளிவு மறைவுமின்றி நடைபெறுகிறது,” என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படும் கட்த்தல்களுக்கு அரசும் உடந்தையாக இருக்கின்றது, என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும், பாதுகாப்புப் படையினர் எவராவது சட்டத்தை

மீறியிருந்தால் அவர்கள் அதற்கு பொறுப்புச் சொல்ல வைக்கப்படுவார்கள் எனவும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஏனைய அரசாங்க அதிகாரிகள் பலரும் தொடர்ந்து கூறிவந்துள்ளனர். ஆனால், இதுவரை அரசாங்கம் எவ்வித தாக்கமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

யுனிசெப் அமைப்பின் தகவலின்படி, டிசம்பர் மாதத்தில் -10உம், ஜனவரி மாதத்தில் -24உம், பெப்ரவரி மாதத்தில் - 11மாக மூன்று மாத காலத்தில், கருணா குழுவினரால் சிறார்கள் கடத்தப்பபட்ட மொத்தம் 45 சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன. இச்சிறார்களில் மூவர். மட்டக்களப்பு மாவட்டத்திற்குள்ளேயே இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களில் இருந்து கருணா குழுவின் அங்கத்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டவர்களாவர். அச்சம் காரணமாக பல கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக முறையிடுவதற்கு பெற்றோர்கள் பலரும் தயங்குவதால், உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகாமாக இருக்கலாம் என நம்பப்படுவதோடு, கருணா குழுவினால் மேற்கொள்ளப்படும் பலவந்த ஆட்சேர்ப்பில் கொண்டு செல்லப்படும் 17 வயதிற்கு கூடியவர்களின் எண்ணிக்கை இதற்குள் உள்ளடக்கப்படவில்லை.

டிசம்பர் மாதத்திலிருந்து கருணா குழுவினர் ஆகக் குறைந்தது பத்துப் பன்னிரன்டு சிறார்களையாவது விடுதலை செய்துள்ளனர். ஆனால், அதேவேளை, யுனிசெப்பின் தகவலின்படி, அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் ஆகக் குறைந்தது மூன்று சிறார்களாவது மீண்டும் பிடிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய வாரங்களில், எவ்வாறு கருணா குழுவின் அங்கத்தவர்கள் தமது பிள்ளைகளை கடத்திச் சென்றார்கள் என, கடத்தப்பட்ட ஒரு சிறுவனினதும் இரு இளைஞர்களினதும் பெற்றோர்கள், பெப்ரவரி மாதத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் விபரித்தார்கள். முதலாவது சம்பவத்தில், அச்சிறுவன் முதல் முறையாக கருணா குழுவினால் ஜுலை மாதத்தில் கடத்திச் செல்லப்பட்டதாகவும், பின்னர் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டு, ஒரு வாரத்தின் பின்னர் வந்து மீண்டும் கொண்டு செல்லப்பட்டுள்ளான். இரண்டாவது சம்பவத்தில், வெலிகந்தைக்கும் வாழைச்சேனைக்கும் இடையே செல்லும் A11 வீதியில் வைத்து அவ்விரு இளைஞர்களும் கருணா குழு அங்கத்தவர்களால் கடத்தப்பட்டுள்ளனர். அவ்விருவரின் உறவினர்கள் அருகாமையில் உள்ள கறாபொல என்னுமிடத்தில் அமைந்துள்ள கருணா முகாமில் முறையிடுவதற்கு சென்றதும், இக்கடத்தல்கள் பற்றி முறையிட வேண்டாம் எனவும், அவர்களின் மகன்மார் புலிகளால் கொண்டுசெல்லப் பட்டார்கள் எனவும் கூறும்படி, கருணா குழு அங்கத்தவர்கள் அவர்களிடம் கூறியுள்ளனர்.

அதேவேளை புலிகள் இயக்கமும் தொடர்ச்சியாக, பெண்கள், சிறுமிகள் உட்பட சிறார்களையும் வயது வந்த இளைஞர்களையும் பலவந்தமாக பிடித்துச் செல்வதாக, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவிக்கிறது. யுனிசெப் அமைப்பின் தகவல்களின்படி, புலிகள் இயக்கமானது, ஜனவரி மாதத்தில் 19 சிறார்களையும், பெப்ரவரி மாதத்தில் 9 சிறார்களையும் கடத்தியுள்ளது. அத்துடன் புலிகள் இயக்கமானது உள்ளுருக்குள் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களில் இருந்தும் ஆகக் குறைந்தது நால்வரைக் கடத்திச் சென்றுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் செல்வது தொடர்சியாகவே கடினமாக இருப்பதோடு, கிழக்கில் புலிகள் இயக்கமானது பெண்களை தமது படைகளில் சேர்த்து அவர்களை முன்னணிப் படையினராக பயன்படுத்துவது அதிகரித்து வருவதாக மிக நம்பிக்கையான அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தொப்பிகல என்னும் பகுதியில் அண்மையில் நிகழ்ந்த மோதல்களின்போது, புலிகள்

இயக்கத்துக்காக சண்டைகளில் ஈடுபடுத்தப்பட்ட ஆகக் குறைந்தது மூன்று பெண்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

புலிகள் இயக்கம் சிறார்களை படையினராக பாவிப்பதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொடர்ச்சியாக கண்டித்து வந்துள்ளதோடு, அவற்றை ஆவணப் படுத்தியும் வந்துள்ளது. புலிகள் இயக்கமானது சர்வதேச சட்டங்களை மீறுகின்ற வகையில் சிறார்களை படைகளில் சேர்க்கும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதனால் அவ்வியக்கத்தை இலக்கு வைத்து குறிப்பான தடை நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கோரியுள்ளது.

"புலிகள் இயக்கமானது சிறார்களை படைகளில் சேர்க்கும் குற்றச் செயலில் தொடர்ந்து ஈடுபடும் அபகீர்த்தியைப் பெற்ற ஒரு அமைப்பாகும்," எனவும் ப்ரட் அடம்ஸ் கூறினார். "ஆனால் அதே அசிங்கமான செயற்பாட்டில் தற்போது அரசாங்கப் படையினரும் கருணா குழுவினரும் ஒருவருக்கொருவர் உடந்தையாக ஈடுபட்டிருப்பது மிகவும் அவமானகரமான செயலாகும்."

தற்போது அரசாங்கப் படையினர் கருணா குழுவினரின் சட்ட விரோத நடவடிக்கைகளுடன் மிக வெளிப்படையாக இணைந்து செயற்படுவது பற்றி மிக உறுதியான ஆதாரங்கள் இருக்கின்றன என, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கூறுகின்றது. மட்டக்களப்பு மாவட்டமெங்கும் கருணா குழுவினரின் ஆயுதமேந்திய அங்கத்தவர்கள் தொடர்ச்சியாக அரசாங்க படையினர் பார்க்கக்கூடிய வகையில் மிக வெளிப்படையாகவே நடமாடுகின்றனர்.

கருணா குழுவின் தளபதிகளில் ஒருவரான ஜெயம் என்பவர் வாழைச்சேனைக்கு வெளியே இலங்கை இராணுவத்தினரின் கவச வாகனமொன்றின் மேல் அமர்திருந்தபடி பயணித்ததை, பெப்ரவரி மாதத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அவதானித்துள்ளது. கருணா குழுவின் அங்கத்தவர்கள் தொடர்ச்சியாக பொலீசாருடன் இணைந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியிருக்கும் மக்கள் அவதானித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரத்திற்கு வட மேற்காக சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பொலொநறுவை மாவட்டத்தில், வெலிகந்தை நகரத்திற்கு வடமேற்காக 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காடுகளுக்குள் ஆகக் குறைந்தது ஐந்து முகாம்களையாவது கருணா குழுவினர் வைத்திருக்கின்றனர். இலங்கை இராணுவத்தினரின் 23வது படையணியின் பிரதான தளமானது வெலிகந்தை என்னும் இடத்திலேயே அமைந்துள்ளது. வாழைச்சேனையில் இருந்து வெலிகந்தையை நோக்கிச் செல்லும் A11 பிரதான பாதை இங்கு அமைந்திருப்பதால், இப்பகுதியானது அரசாங்கத்தின் மிக இறுக்கமான கட்டுப்பாட்டின் கீழுள்ளது. முத்துகலையில் அமைந்துள்ள கருணாவின் முகாமானது இராணுவத்தினரின் சோதனைச் சாவடிக்கு அருகாமையிலேயே அமைந்துள்ளது.

கருணா குழுவினராலும் புலிகள் இயக்கத்தினாலும் சிறார்கள் கடத்தப்பட்டு படைகளில் சேர்க்கப்படுதல் தொடர்பாக மிகவும் விரிவான தகவல்களை பல சுதந்திரமான அமைப்புகள் வழங்கியுள்ளன. ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பான ஐ.நா.வின் விசேட ஆலோசகர் அலன் ரொக் கடந்த நவம்பர் மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் அடிப்படையில், இலங்கையில் அரசாங்கப் படையினரின் ஒத்தாசையுடன் கருணா குழுவினர் சிறார்களைக் கடத்தி தமது படைகளில் சேர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பற்றியும், புலிகள் இயக்கம் சிறார்களை படைகளில் சேர்ப்பது பற்றியும் அவர் பெப்ரவரி மாதத்தில், பாதுகாப்புச் சபைக்கு அறிக்கையொன்றை

வழங்கியிருந்தார். மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, **அரசாங்கத்திடம் கையளித்த 100 பக்கங்கள் அடங்கிய அறிக்கையை, "குற்றச் செயலுக்கு உடந்தை: கடத்தல்களில் பங்காளியாக அரசு, மற்றும் சிறார்களை படையில் சேர்க்கும் கருணா குழு" என்னும் தலைப்பில் ஜனவரி மாதம் வெளியிட்டிருந்தது.** கருணா குழுவின் அங்கத்தவர்கள் எவ்வாறு அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சட்டத்துக்கு அஞ்சாத விதத்தில் சிறார்கள் மற்றும் இளைஞர்களைக் கடத்தி, அவர்களை முகாம்களில் வைத்து பயிற்சியளித்து, எவ்வாறு தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறார்கள் என்பன தொடர்பாக, சம்பவக் கற்கைகள், வரைபடங்கள் மற்றும் புகைப்படங்கள் சகிதம் அவ்வறிக்கையானது மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தது.

"தாங்கள் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு தமக்கு ஆதாரங்கள் தேவைப்படுவதாக அரசாங்கம் கூறுகின்றது, ஆனால் பெருந்தொகையான தகவல்கள் ஏற்கனவே அவர்களிடம் இருக்கின்றன." என அடம்ஸ் கூறினார். "ஐ.நா. வழங்கியுள்ள ஆவணம் மற்றும் எமது அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வாக்குமூலங்கள் என்பவற்றுக்கும் மேலதிகமாக, பல குடும்பங்கள் முறையாகப் பொலீசாரிடம் மேற்கொண்டுள்ள முறைப்பாடுகளும்கூட அவர்களிடம் இருக்கின்றன."

நாடு பூராகவும் நடைபெறும் கடத்தல்கள் மற்றும் காணமல் போதல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கென தனிநபர் ஆணைக் குழுவொன்றை கடந்த வருடத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ நியமித்தார். அதன் ஆணையாளரின் வருகைக்காக ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்த திகதி முன்னறிவித்தல் ஏதுமின்றி இரத்துச் செய்யப்பட்டு இரண்டு மாதங்களின் பின்னர், கடந்த ஜனவரி மாதம் ஆணையாளர் மட்டக்களப்பிற்கு சென்றிருந்தார். அவரது வருகை தொடர்பாக, கடத்தப்பட்ட சிறார்களின் பெற்றோர்களுக்கு மிக நிட்சயமற்ற விதமாகவே அறிவிக்கப்பட்டிருந்ததாலும், ஆணையாளரைச் சந்திக்கும் இடம் இறுதி நேரத்தில் மாற்றப்பட்டதாலும், பலரால் அதனை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், சில பெற்றோர்கள் ஆணையாளரை சந்தித்தாலும், அவர்கள் தகவல்கள் வழங்குவதை ஆணையாளரின் அதிகாரிகள் தடுத்துள்ளனர்.

கருணா குழுவினால் கடத்தப்பட்ட சில சிறார்களின் தாய்மார்களை தமது முகாமுக்கு வரும்படி இராணுவத்தினர் அழைத்திருந்ததோடு, அக்கடத்தல் சம்பவங்கள் தொடர்பான விபரங்களை வழங்கும்படியும் கோரியுள்ளனர். ஆனால், அவர்களின் பிள்ளைகள் "இனம்தெரியாத குழுவொன்றினால்" கடத்திச் செல்லப்பட்டதாக அத்தாய்மார்களை கூறவைப்பதற்கு அவ் இராணுவத்தினர் முயற்சி செய்துள்ளனர்.

தனது குழுவினரால் சிறார்கள் கடத்தப்படுவது அல்லது படைகளில் சேர்த்துக்கொள்ளப் படுவது தொடர்பான குற்றச்சாட்டுக்களை கருணா மறுத்துள்ளார். தமது படையணிகளில் 18 வயதிற்குக் குறைந்த எந்த அங்கத்தவர்களும் இல்லையெனவும், வயது குறைந்த நபர்களை படையில் சேர்க்க முயலும் தனது எந்தவொரு தளபதிக்கு எதிராகவும் தாங்கள் ஒழுக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அவர் பெப்ரவரி மாதம் 9ம் திகதி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் நடத்திய தொலைபேசி உரையாடலின் போது கூறினார்.

தமது இராணுவ அணிகளுக்கு ஆள் சேர்ப்பிற்கான ஆகக் குறைந்த வயதெல்லையானது 18 என்பதை வரையறுத்து, அதற்கான ஒழுங்கு விதிகளை TMVP கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டதோடு, சிறார்களை படையணியில் சேர்க்கும் அங்கத்தவர்களுக்கு வழங்கும் தண்டனைகளையும் அதில் வரையறுத்திருந்தது. இவ்வொழுங்கு விதிகளை மேலும் செழுமைப்படுத்துவது தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கும் கருணா தனது விருப்பத்தை தெரிவித்திருந்தாலும், பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு தனது முகாம்களுக்கு முன்னறிவித்தலின்றி வருகை தருவது சாத்தியப்பட மாட்டாது எனவும் கூறினார்.

www.tamilarangam.net

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்சியாக சிறார்கள் பலவந்தமாக பிடிக்கப்படுவது தொடர்பாக அண்மையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி அவர்களின் கருத்தைக் கோரி, மார்ச் 19ம் திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது TMVPக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது. ஆனால், ஏப்ரல் 28ம் திகதி வரை TMVP அதுபற்றி எந்தப் பதிலையும் தரவில்லை.

"அரசாங்கத்தின் கீழ்தரமான செயற்பாடுகளை கருணா அணியினர் மேற்கொள்ளுகின்றனர்," என அடம்ஸ் தெரிவித்தார். கருணா குழுவினரால் சிறார்கள் பலவந்தமாக படையினராக பயன்படுத்துவதை தடுத்து நிறுத்துவதற்கு கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் இதுவாகும்."

2007 ஜனவரி 27ம் திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் வெளியிடப்பட்ட, குற்றச் செயலுக்கு உடந்தை: கடத்தல்களில் பங்காளியாக அரசு மற்றும் சிறார்களை படையில் சேர்க்கும் கருணா குழு என்னும் அறிக்கையை http://hrw.org/reports/2007/srilanka0107/srilanka0107_tamilweb.pdf என்னும் இணையதளத்தில் பார்வையிடலாம்.